பக்கங்கள் 19 + 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 21 புதன்கிழமை 04.06.2024 | அதிர்வு 305

திரும்பவும் 3 மாதங்களுக்கு

## தள்ளிப் போனது தமிழரசு வழக்கு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு எதி ரான வழக்கு இன்று திருகோணமலை 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




“வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்”

# “எம் சொந்த நிலத்தை பறிக்க முனையாதே!”

## யாழ். பல்கலையில் கவனவீர்ப்புப் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் கைது செய்யப்பட்ட தமிழ் விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், தொல்லியில் ரீதியான ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தினரால் இன்று கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 02▶

# வர்த்தமானி நீக்க அறிவிப்பு உடன் வெளியிடப்படாவிடின் சட்ட மறுப்புப் போராட்டம்!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அறிவிப்பு



“27.05.2025 அன்று காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் பிரசுரித்த வர்த்தமானியை மீள்கைவாங்குவதாக அரசு அறிவித்தது. நாம் விதித்த காலக்கெடுவுக்கு முதல் நாள் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஒரு வாரமாகியும் இன்று வரை அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. உடனடியாக இது செய்யப்படாவிட்டால், சட்ட மறுப்புப் போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர வேறு தெரிவு எமக்கு இருக்க மாட்டாது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று சமூக ஊடகங்கள் வாயிலாக அறிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராது விடின், அவை அரச காணி 04▶






## எம் சொந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் முன்பாக இன்று நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய பல்கலைக் கழகக் சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, “வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்”, “இந்த மண் எங்களின் சொந்த மண்”, “கலாசார அழிப்பை நிறுத்து”, “தழிழரின் நிலம் தமிழருக்கே”, “நிலம் எங்கள் சொத்து அதனைப் பறிக்க முனையாதே!”, “விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள விவசாயிகளை விடுதலை செய்” ஆகிய கோஷங்களைப் போராட்டக் காரர்கள் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் யாழ். பல் கலைக்கழக மாணவர்கள், பல்கலைக் கழக ஊழியர்கள், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின்போது பல்கலைக்கழக நுழைவாயிலில் பொலிஸார் நிறுத்தப்பட்டு கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.

கடந்த மே மாதம் 10 ஆம் திகதி குமுழ முனை – தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் காணியின் உரிமையாளர் தனது பணியாட்களைக் கொண்டு உழவு இயந்திரத்தின் மூலம் குருந்தூர்மலை பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டார். இதன்போது தொல்பொருள் தளத்தைச் சேதப்படுத்தியதாகக் கூறி தேரர்ஒருவர்செய்தமுறைப்பாட்டுக்கமைய இரண்டு விவசாயிகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரியே போராட்டம் நடத்தப்பட்டது.

















## “மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளை சர்வதேச மேற்பார்வையுடன் முன்னெடுக்குக”

# செம்மணியில் நாளை கவனவீர்ப்புப் போர்!

### வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் சர்வதேச மேற்பார்வையுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நாளை வியாழக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணியளவில் செம்மணிப் பகுதியில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“செம்மணியில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை பல்வேறு சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

அங்கு இதுவரை தோண்டப்பட்ட புதைகுழியில் இருந்த பல்வேறு எலும்பு கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஆனாலும், அவை தொடர்பான முழுமையான விவரங்கள் வெளிவரவில்லை. இவ்வாறான நிலையில் புதைகுழி தோண்டும் பணிகளை இடைநிறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், அங்கு எலும்பு எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

அதேநேரத்தில் சர்வதேச மேற்பார்வையுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைய புதைகுழி தோண்டும் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை முன்னெடுக்கப் படுகின்ற இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.” – என்றுள்ளது.

# முள்ளியவளை, மாமூலை பகுதியில் கதவு உடைத்துத் தங்க நகை திருட்டு!

முல்லைத்தீவு– முள்ளியவளை, மாமூலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவமானது நேற்று இரவு (3) இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீட்டில் எவரும் இல்லாத நிலையில் வீட்டின் கதவு உடைக்கப்பட்டு அறையில் இருந்த அலுமாரியில் வைக்கப்பட்ட 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வீட்டுக்குச் சென்ற வீட்டின் உரிமையாளர்கள் இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்து உடனடியாக முள்ளியவளை பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணையினை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





### ஐக்கிய மக்கள் சக்தியின்

# வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை உறுப்பினர்கள் இன்று சத்தியப் பிரமாணம்

(கி.வசந்தன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர் சினியின் அலுவலகத்தில் வைத்து சட்டத்தரணி முன்னிலையில் இன்று இந்தச் சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கு நியமன உறுப்பினர்கள் உட்பட 3 ஆசனங்கள் கிடைத்தன. அதில் இரு பெண்களும், ஓர் ஆண் உறுப்பினரும் அடங்குவர்.



மேற்படி மூன்று உறுப்பினர்களுமே சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்

இதன்போது கட்சியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் கருணாதாச உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## தள்ளிப் போனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் மேலும் மூன்று மாதங்களுக்கு தள்ளிப்போடப்பட்டு செப்டெம்பர் முதலாம் திகதிக்குத் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் எதிராளிகளில் ஒருவராக இருந்த தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அந்தப் பதவியில் இருந்து விலகிய நிலையில் காலமாகிவிட்டார். அவரது இடத்துக்கு மற்றொரு எதிராளியாகக் கட்சியின் தற்போதைய தலைவர் சி.வி.கே. சிவஞானத்தைப் பதிலீடு செய்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியதோடு, அடுத்த வழக்குத் தவணைக்கு அவருக்கு நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவிட்டது.

இவற்றுக்கிடையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த கட்சியின் பொதுச்சபை உறுப்பினர் என்ற பெயரில் சுப்ரமணியம் சபாரத்தினம் என்பவர் சார்பில் தன்னையும் வழக்கின் ஓர் எதிராளியாகச் சேர்த்துக்கொள்ளக் கோரும் இடையேயீட்டு விண்ணப்பம் ஒன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டத்தரணி குருபரன் அதனைச் சமர்ப்பித்து வாதிட்டார்.

எதிராளிகளான சிறீதரன், யோகேஸ்வரன், குகதாசன் ஆகியோர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரன் அதனை ஆட்சேபிக்க வில்லை. வரவேற்றார். ஆனால், சுமந்திரன் உள்ளிட்ட ஏனைய எதிராளிகளும் வழக்காளியும் அதனை ஆட்சேபித்தனர்.

தனக்காக நீதிமன்றத்தில் தானே முன்னிலையான எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், "இந்த வழக்கை முடிக்க விடாமல் இழுத்தடிப்பதற்காவே இவ்வாறு வழக்குத் தொடங்கி ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் ஒருவரை இடையேயீட்டு எதிராளியாகச் சேர்க்க விண்ணப்பிக்கப் படுகின்றது." – என்றார்.

மற்றைய எதிராளிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கேசவன் சயந்தனும் அதேபோன்று ஆட்சேபனை முன்வைத்தார்.

அதனையொட்டி இரு தரப்பினரினதும் வாதங்களைச் செவிமடுத்த நீதிபதி, இந்த விடயத்தை ஒட்டி இரு தரப்பினரும் எழுத்து மூல ஆட்சேபனைகளைச் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும் படியும், அதன் பின்னர் நீதிமன்றம் அது தொடர்பில் உத்தரவு ஒன்றை வழங்கும் என்றும் குறிப்பிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

## வர்த்தமானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களாகப் பிரகடனப்படுத்தப்படும் என ஆளும் தரப்பினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மார்ச் 28 ஆம் திகதி வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அந்த அறிவித்தலை ஆளும்தரப்பும் முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி தமிழ் அரசியல் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு உருவானது. வர்த்தமானியைத் திரும்பப் பெறாவிட்டால் வடக்கில் அரச செயற்பாட்டு முடக்கப் போராட்டம், சட்டமறுப்புப் போராட்டம் என்பன இடம்பெறும், ஜனாதிபதி அநுரகுமார வடக்குக்கு வர முடியாத வகையில் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று தமிழரசுக் கட்சி அறிவித்திருந்தது. அதுமட்டுமன்றி, இந்த வர்த்தமானி அறிவித்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச சட்ட உதவியை வழங்கவும் சட்டத்தரணிகள் குழு முன்வந்திருந்தது. இந்தநிலையில், அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

எனினும், அரசு வெளியிட்ட வர்த்தமானியை நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படாவிடின், சட்ட மறுப்புப் போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர வேறு தெரிவு எமக்கு இருக்க மாட்டாது என்று தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேலும் கூறினார்.

# மனைவியைக் கழுத்து வெட்டி படுகொலை செய்தமை ஏன்?

## பொலிஸாரிடம் கணவன் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள்

(கி.வசந்தன்)

வவுனியாவில் ஆசிரியையான 32 இளம் குடும்பப் பெண் கணவனால் கழுத்துவெட்டிக்கொல்லப்பட்டமைக்கான காரணம் வெளியாகியுள்ளது.

தனது மனைவியைக் கழுத்து வெட்டிக் கொலை செய்த கணவன், மனைவியின் தலையுடன் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த கொடூர சம்பவம் நேற்று இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட 35 வயதான யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சுகிர்தரன் என்ற இளம் குடும்பஸ்தரான மரணமடைந்த பெண்ணின் கணவன் வழங்கிய வாக்கு மூலத்தில் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவர்ணலதா என்ற 32 வயதான நைனாமடு அரச பாடசாலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியரான இவர் கணவனால் கொலை செய்யப்பட்டமைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வந்த போதிலும் கணவனால் புளியங்குளம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் தனது மனைவி மூன்று மாதம் கர்ப்பிணியாக இருந்தார் எனவும், அதில் ஏற்பட்ட சந்தேகமே இந்த நிலைமைக்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தான் கொழும்பில் தங்கியிருந்து கட்டட வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார் என்று தெரிவித்துள்ள மேற்படி இளம் குடும்பஸ்தர், நீண்ட காலமாக தனக்கும் மனைவிக்கும் இடையில் பல சலசலப்புகள் ஏற்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை தனது தொலைபேசிக்கு ஒரு 21 வயது இளைஞரால் அனுப்பப்பட்ட புகைப்படங்களால் தனது



கோபம் உச்சம் அடைந்த நிலையில் தான் கொழும்பிலிருந்து நொச்சிக்குளம் கிராமத்துக்கு வருகை தந்து தன் மனைவியுடன் பல்வேறு விடயங்களில் கருத்து முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இதில் தீர்வு கிடைக்காத நிலையில் தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது சொந்த ஊரான யாழ்ப்பாணம், மானிப்பாய்க்குச் சென்று பின்னர் திங்கட்கிழமை மீண்டும் வருகை தந்து மனைவியைத் தாய் சேய் பராமரிப்பு நிலையத்துக்கு அழைத்துச் சென்றதாகத் தெரிவித்த அவர், இந்தக் குழந்தைக்குக் காரணம் யார் என்பது தொடர்பில் தனக்கு நீண்ட கால சந்தேகம் ஏற்பட்டு இருந்ததாகவும், இது தொடர்பாக தன் மனைவியிடம் கேட்டதன் பிரகாரம் எவ்விதமான பதிலும் அவர் கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவர் அதை ஒத்துக்கொண்டதையடுத்து தனது மனைவியைப் புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியே அவர் சின்ன பூவரசங்குளம் காட்டுப் பாதையால் அழைத்து வந்திருக்கின்றார் என்றும் தெரிவித்திருந்தார்.

அந்தக் காட்டுப் பாதையின் வழியே 200 மீற்றர் அளவில் சென்றதன் பின்னர் மனைவி ஏன் இந்த வீதியால் செல்கிறீர்கள் எனக் கேட்டபோது, தான் அந்த 21 வயது இளைஞர் இந்தப் பகுதிக்கு வருவதாகவும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண்பதற்காக இங்கே வந்துள்ளோம் என்றும் கூறியதாகப் பொலிஸாரிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியின் மூலம் தனது மனைவியை வெட்டியதாகவும், அவர் சிறிது தூரம் ஓடி கீழே விழுந்ததன் பின்னர் தான் மனைவியை மூன்று முறை வெட்டி கழுத்தைத் துண்டாக்கி அதனை அவர் அணிந்திருந்த மழைக் கவசத்தால் மூடி மோட்டார் சைக்கிளின் முன் பகுதியில் வைத்து கொண்டு வந்ததாகவும் புளியங்குளம் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளையும், தலையையும் கைப்பற்றியதோடு அவரையும் கைது செய்திருந்தனர்.

இதனையடுத்து உயிரிழந்து இறந்த பெண்ணின் கணவன் சுகிர்தரன் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சின்னப்பூவரசங்குளம் காட்டுப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தைக் கைப்பற்றி இருந்தனர்.

அந்தப் பகுதிக்குத் தடயவியல் பொலிஸாரும் வருகை தந்து அங்கிருந்த சான்றுப் பொருட்களைச் சேகரித்ததோடு, குறித்த விடயம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் இரத்தக்கறைகளுடன் இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

## பொலிஸார் தீவிர விசாரணை

(கி.வசந்தன்)

வவுனியா, காத்தார்சின்னக்குளத்தில் உள்ள வீடொன்றிலிருந்து இரத்தக்கறைகளுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் இன்று புதன்கிழமை மீட்டுள்ளனர்.

வீடொன்றில் ஆண் ஒருவரின் சடலம் இருப்பதாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா, காத்தார்சின்னக்குளத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இளைஞர் குழுவொன்றுடன் மோதலில் ஈடுபட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வரும் வவுனியா குற்றப் பிரிவுப் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு இளைஞர்களிடம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அதிகார அடாவடி!

இந்த நாட்டை கடந்த முக்கால் நூற்றாண்டுகளாக ஆட்சி செய்து வந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு சற்றும் சளைத்தது அல்ல இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசு. அதனை இந்த அரசுத் தலைமை உறுதிப்படுத்தி, நிரூபித்து வருகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கும் வரை, தற்போதைய அரசமைப்பின் கீழான 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றுதான் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றுக்கு முன்னர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வந்தது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்குத் தேவையான போதிய நாடாளுமன்றப் பலத்தை நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு வழங்கி இருக்கிறார்கள். ஆனால், புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் சூழலில் தம்முடைய நிறைவேற்றதிகாரம் அந்தச் சட்டத்தின் கீழ் கைநழுவிப் போய்விடும் என்பதால், ஜனாதிபதிப் பதவியின் முழு அதிகாரங்களையும் தொடர்ந்து பிரயோகிக்கும் அவாவில், புதிய அரசமைப்புச் சட்டத்தை கொண்டு வரும் திட்டத்தையே தள்ளிப் போட்டிருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இந்த அரசின் ஆட்சி காலத்தின் அந்தத்தில் புதிய அரசமைப்பு வரும் என்று நம்புவதற்கும் இடமில்லை. அதற்கு முன்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் கீழான அதிகாரப் பரவலாக்கலை முழுமையாக நடைமுறைப்படுத்தும் எண்ணமோ, நிலுவையில் இருக்கும் மாகாண சபை தேர்தல்களை நடத்தும் திட்டமோ ஆளும் தரப்புக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அதற்கிடையில் மாகாணங்களுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களை மெல்ல மெல்லப் பிடுங்கி எடுத்து விட வேண்டும் என்ற நயவஞ்சகத் திட்டத்தில் இந்த அரசும் செயற்படுவது கண்கூடு.

13 ஆவது திருத்தத்தின் கீழ் பாடசாலைக் கல்வி மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட - பகிரப்பட்ட - விவகாரம். ஆனால் அத்தகைய பாடசாலைகளை ஒவ்வொன்றாக தேசிய பாடசாலைகள் என்ற பெயரில் மத்திய அரசின் கீழ் கொண்டு வருகின்ற திட்டத்தை இந்த அரசும் முனைப்புடன் முன்னெடுக்க இருக்கின்றது. அதனை நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சராக இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவே உறுதிப்படுத்தி இருக்கிறார்

கடந்த அரசாங்கத்தினால் ஆயிரம் தேசிய பாடசாலைகளைஅமைக்கும் வேலைத்திட்டத்தில் 23 பாடசாலைகளேதேசியபாடசாலைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏனைய பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது என பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது மாகாணசபைகளின் கீழ் இருக்கும் ஆயிரம் பாடசாலைகள், இனித் தேசியப் பாடசாலைகள் எனப் பெயர் மாற்றம் பெற்று மத்திய அரசின் கல்வி அமைச்சின் கீழ் வரப் போகின்றன. மாகாணத்துக்குப் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு கொத்தோடு பிடுங்கி எடுக்கும் அதிகார அடாவடித்தனம் இது.

மாகாணங்களுக்குப் பரவலாக்கப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசு அவ்வப்போது சுரண்டிப் பிடுங்கி எடுப்பதைத்தடுக்கவேண்டுமானால் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுத் தீர்வே அதற்கு ஒரே வழி.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர்களுக்குப் பிணை

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைதான இரண்டு இளைஞர் களையும் பிணையில் செல்ல பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றம் அனுமதித் துள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்ட தமது நண்பனைப் பார்வையிட வைத்தியசாலையில் பார்வையாளர் நேரம் முடிவடைந்த பின்னர் இரண்டு இளைஞர்களும் சென்றுள்ளனர்.

அவர்களை வைத்தியசாலை பாது



காப்பு உத்தியோகத்தர்கள் வைத்திய சாலைக்குள் அனுமதிக்காத நிலையில், அவர்களை மீறி உள்நுழைந்துள்ளனர்.

அதனையடுத்து வைத்தியசாலையில் பணியில் இருந்த பொலிஸார் இருவரையும் தடுத்து நிறுத்திய வேளை அவர்களுடனும் முரண்பட்டுள்ளனர். இருவரும் மதுபோதையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், இருவரை யும் பொலிஸார் கைது செய்து மேலதிக சட்ட நடவடிக்கைக்காகப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் இருவரையும் முற்படுத் திய வேளை இருவர் சார்பிலும் முன்னி லையான சட்டத்தரணியின் பிணை விண்ணப்பத்தை ஏற்ற மன்று, இருவரை யும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதி யான பிணையில் செல்ல அனுமதித்தது.

# கடலரிப்பால் ஆபத்தான நிலையில் உள்ள வங்காலையைக் காப்பற்ற முன்வாருங்கள்!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**(விஜயரத்தினம் சரவணன்)**

கடலரிப்பால் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ள மன்னார் - வங்காலைப் பகுதியைக் காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை கடலரிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வங் காலை மற்றும், முத்தரிப்பில் கடல் அணைகளை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் இதன்போது நாடாளு மன்ற உறுப்பினர் கோரிக்கையையும் முன்வைத்தார்.

நாடாளுமன்றில் நேற்று (03) உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் வங்காலைக் கிராம மக்கள் கடலரிப்பால் ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். வங்காலைக் கிராம மக்களுக்கு உரிய உதவிகள் செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கை காப்பாற்றப்பட வேண்டும்.

வங்காலைக் கிராமமானது நான்கு கிராமஅலுவலர் பிரிவுகளையும், சுமார் பத்தாயிரம் மக்கள் தொகையையும் கொண்டது. விவசாயமும், கடற்றொழி லும் பிரதான தொழிலாகவுள்ளது. 450 வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் மூலம் மீன்பிடித்தல், கரைவலைத் தொழில் போன்றவற்றில் அதிகமான வாழ்வாதாரம் தங்கியுள்ளது. கடந்தசில ஆண்டுகளாக ஏற்பட்டுவருகின்ற தீவிர கடலரிப்பு காரணமாக இந்தக் கிராமம் பாரிய நெருக்கடியை சந்தித்து வரு கின்றது.

அந்தவகையில் கடலரிப்பின் காரணமாக மூன்று பெரிய தென்னந் தோப்புகள் (2000மரங்கள்) முற்றாக அழிவடைந்துள்ளன. இதேபோல் பனை



மரங்கள், ஏனைய மரங்களும் கடல ரிப்பால் அழிவடைந்துள்ளன.

அத்தோடு மீன்வாடிகள், குடியிருப் புக்கள், மீன் சந்தைக் கட்டடம் போன் றவை பாரிய அளவில் பாதிப்படைந் துள்ளன. பழைய வைத்தியசாலைக் கட்டடம் முழுமையாகக் கடலுக்குள் சென்றுவிட்டது. சுமார் 450 இயந்திரப் படகுகளையும் கரையில் பாதுகாப்பாக நிறுத்த முடியாத நிலை காணப்ப டுகின்றது. எனவே பொருத்தமான இடங்களில் கடலணை அமைக்கப்பட்டு மக்களையும், அவர்களின் வாழ்வாதாரத் தையும் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு சட்ட விரோதமான டைன மற் பாவனை, கரையோர கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுதல், மணல் அகழ்வு போன்ற செயற்பாடுகளை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த வங்காலைக் கடலரிப்பு பிரச்சினை தொடர்பில், கடந்த மாதம் 28 ஆம் திகதி மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, ஏற்கனவே இரண்டு தடுப்பணைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது மன்னார் மாவட்ட செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நானும், பிரதி அமைச்சர் உபாலிசமரசிங்க, ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், றிஷ ாத் பதியுதீன், காதர் மஸ்தான், முத்து முகமது, மன்னார் மாவட்டசெயலாளர் ஆகியோர் இணைந்து கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள வங்காலைப் பகுதிக் குச் சென்று, பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டோம். இதன்போது மேலதி கமாக ஆறு தடுப்பணைகள் அமைக் கப்படல் வேண்டுமென மக்களால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இந்த ஆபத்தான நிலமைகள் தொடர்பில் உரியவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். இவை மக்களின் பாதுகாப்போடு சம்மந்தப்பட்டவை. உடன் சீர்செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதே போன்று முத்தரிப்புத்துறை பகுதியிலும் சீரற்ற நிலை காணப்படுகின் றது. உரியவர்கள் மக்களின் பாதுகாப்பு விடயத்தில் கரிசனையுடன் செயல் படவேண்டும். இங்கு கடற்கரையோரம் உள்ள படையினருக்கு தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு தடுப்பணை அமைக்கப்படவில்லை.- என்றார்.

# கரவையில் சிவாவின் நினைவுதினம்!



தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் 23 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை காலை வடமராட்சி, நெல்லியடி சந்தியில் உள்ள அவரின் சிலைக்கு மலரஞ்சலி செய்யும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் இளையதம்பி இராகவன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், கல்விமான்கள், சமூகப் பிரமுகர்கள் கலந்து கொள்வர்.



# போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நுவரெலியாவில் கொடி விற்பனை திட்டம்

(மஸ்கெலியா )

சர்வதேச புகையிலை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்துடன் இணைந்து நுவரெலியா மாவட்டம் கொடி விற்பனை திட்டத்தை ஏற்பாடு செய் துள்ளது.

வலிமையுடன் நாட்டை வெல் – போதைப் பொருள் பிடியிலிருந்து விடுபடுங்கள் என்ற கருப்பொருளின் கீழ், சமுர்த்தி மேம்பாட்டுத் துறை சர்வ தேச புகையிலை மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு தினத்துடன் இணைந்து நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்ட பல திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

புகையிலை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு கொடிகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலுக்கான தொடக்க விழா நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.






# உதயசூரியன் சனசமூக நிலையத்தின் தண்ணீர் தாங்கி காங்கேசன்துறையில்!

(வடமராட்சி நிருபர்)

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினாரால் குடி தண்ணீர் தாங்கி அமைத்து நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் பின்னர், 32 ஆண்டுகள் கடந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காங்கேசன்துறை சந்தை வீதியில் குடி தண்ணீர் தாங்கி ஒன்று பிரதேச சபையினரால் வைக்கப்பட்டுக்க குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

பின்னர் பிரதேச சபையினர் குறித்த நீர்த்தாங்கியை அகற்றி இருந்த நிலையில் மக்கள் குடி தண்ணீருக்கு மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கினர்.

இதனைச் சீர்செய்யும் வகையில் உதயசூரியன் சனசமூக நிலையம் சார் பாகச் சனசமூக நிலைய வளாகத்தினுள் புதிதாக ஒரு நீர்தொட்டித் தளம் அமைக்கப்பட்டு அதில் நீர்தாங்கி பொருத்தப்பட்டது. இந்த நீர்த் தாங்கி மூலமாக கடந்த மாதம் முதல் மக்கள் பாவனைக்காக குடி தண்ணீர் விநியோகம் இடம் பெற்று வருகிறது.




# விநாயகபுரத்தில் முத்தமிழ் வித்தகரின் துறவற தின நூற்றாண்டு நிகழ்வுகள்!

(வி.ரி.சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு விநாயகபுரத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளத்துடன் இணைந்து நடத்திய நிகழ்வு விநாயகபுரம் சக்தி மகா வித்தியாலயத்திலும் கனிஷ்ட வித்தியாலயத்திலும் நடைபெற்றது.

திருநாவுக்கரசு நாயனர் குருகுலப் பணிப்பாளர் கண.இராசரெத்தினம் முன்னிலை அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்துசமய குரு ஆறுமுக கிருபாகர குருக்கள் சமய கிரியைகளை நடத்தி வைத்தார்.

நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப் படங்களும் வழங்கி வைக்கப்பட்டன.




# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்வது பற்றி முடிவில்லை!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்வது குறித்து தற்போதைக்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இன்று (04) நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



கல்வி சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது தேர்வு முறைகளில் சில மாற்றங்கள் செய்யப்படும்.

பல ஆண்டுகளாக புலமைப்பரிசில் மாணவர்களுக்கு ஏற்பட்டுவரும் அழுத்தத்தைக் குறைப்பது தொடர்பில் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

2028 அல்லது 2029 ஆம் ஆண்டுக்குள் புலமைப்பரிசில் பரீட்சையில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தப்படும் என்று நம்புகிறார் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.




# மலையக மக்களின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கும் நடவடிக்கை!

## அமைச்சர் சரோஜா சாவித்திரி தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

மலையக மக்களின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்துவதே எமது அரசின் நோக்கம் என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலப் பகுதியில், நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை பகுதியில் 300 வீடுகள் காணப்படுகின்றன. ஆனால் அங்கு அவர்களுக்கான மலசல கூட வசதிகள் இல்லை. அந்த 300 வீடுகளில் 25 வீடுகளுக்கு ஒரு மலசலகூட வசதிகளே காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஆகவேதான் எமது அரசு மேற்கொண்டுள்ள வேலைத் திட்டத்தில் பத்தாயிரம் வீடமைப்பு திட்டங்கள் இந்திய அரசோடு கலந்துரையாடி மலசல கூட வசதிகள் இல்லாதவர்களுக்கு மலசல கூட வசதிகள், மின்சாரம், குடி தண்ணீர், காணி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கல்வி இடைவிலகல் பிரதேசமாக மலையகத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதனை தடுக்கும் நோக்கில் அவர்களுக்கான 6000 ரூபா கொடுப்பனவு, பதணி வழங்குதல் விஞ்ஞான கல்வி கணித கல்வி சுகாதார



மையங்கள் போன்றவற்றுக்கான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளோம்.

நாங்கள் ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் உள்ளூராட்சி மன்ற தேர்தல் என மூன்று தேர்தலில்களும் வெற்றி பெற்றுள்ளோம். ஆனால், தற்போது அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட போவதாகவும் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்பட போவதாக பொய்யான வதந்திகளை எதிர் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். மக்களால் ஓரங்கட்டப்பட்டவர்கள்தான் இவ்வாறு பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அமைச்சரவையில் மாற்றத்தை கொண்டுவரவோ அல்லது இதனை விட்டு ஓடவோ நாங்கள் அரசியல் அதிகாரத்தை கையில் எடுக்கவில்லை. இது தொடர்பாக எந்த கலந்துரையாடலையும் எமது அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

எமது அரசு ஊடாகத் துரிதமான வேலையில் நாங்கள் இறங்கி இருக்கின்றோம் எமது பயணம் தொடர்ந்து கொண்டு இருக்கும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் கடந்த இரண்டு வாரத்தில் பிரதேச அபிவிருத்திகள், பொருளாதார மேம்பாடு, நாட்டில் லஞ்சம் மற்றும் மோசடியில் இடுபட்ட திருடர்களுக்கு தண்டனை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

தேர்தலுக்கு பின்னர் இந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அடிபணிந்து எமது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். மீன்பிடி, விவசாயம் போன்ற அனைத்துத் துறைகளுக்குமான அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது நாடு சீரான முறையில் இயங்கி கொண்டு செல்லுகிறது

சர்வதேச நிதியத்தோடு தொடர்பைப் பேணிவந்தது எங்களுடைய அரசு இல்லை. அதனை முன்னதாக இருந்த அரசு தான் செய்தது. ஐ.எம்.எப். நிதியத்தில் இருந்து நாங்கள் விடுபட வேண்டுமாக இருந்தால் 2028 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் கடன்களைச் செலுத்த முடியாமல் போனால் பொருளாதாரத்தில் நாம் வீழ்ச்சியடைந்த ஒரு நாடாக முத்திரை குத்தப்படுவோம்.

ஆகையால்தான் சில கோட்பாடுகளையும் பொறிமுறைகளையும் கையாள வேண்டியிருக்கிறது. நாங்கள் தேசிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். தற்போது நாங்கள் ஐ.எம்.எப். வலைக்குள் சிக்குப்பட்டு இருக்கிறோம். இந்த வலையில் சிக்க வைத்துத்தான் நாட்டை எமக்கு கையளித்தார்கள்.

2028 ஆம் ஆண்டு இந்தப் பிடியில் இருந்து வெளிவருவதற்கு நாம் அனைவருக்கும் கடமைப்பாடு உள்ளது. அமெரிக்கா ஜனாதிபதியின் வரி அதிகரிப்பால் ஆடைத் தொழிற்துறை பாதிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய பொறிமுறை சற்று வித்தியாசமானது.- என்றார்.



# சம்மாந்துறையில் போதை ஒழிப்பு தினம்!

(சர்ஜுன் லாபீர்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை ஒழிப்பு தின நிகழ்வு மே 31 ஆம் திகதி தொடர்க்கம் ஜுன் 17 ஆம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதனை முன்னிட்டு புகைத்தல் எதிர்ப்பு கொடி உத்தியோக பூர்வ அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமீல், மேலதிக மாவட்டப் பதிவா ளர் ஏ.கே. ரினோஸா, சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் எம். ஹம்சார், பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரி டி.எம். ரஹீமா, அஸ்ஸிராஜ் வங்கி முகாமையாளர், சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அஸ் சிராஜ் வலய பிரிவுகளில் உள்ள சமுதாய அடிப்படை அமைப்புகளின் அங்கத்தவர்களுக்கு இந்தப் புகைத்தல் எதிர்ப்பு கொடி விற்பனை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



## வண்ணை. கோட்டையம்பதி முருகன் ஆலயத்தில்

# 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது மாம்பழம்!

(எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம் ஒன்றில் நடைபெற்ற மாம்பழத் திருவிழாவின் மாம்பழம் பல லட்சங்களுக்கு ஏலம் போயுள்ளது.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, தாமரைவீதியில் அமைந்துள்ள வண்ணை. கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்திலே இந்த ஏலம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலயத்தில் 15 நாள்கள் திருவிழா நடைபெற்று வருகிற நிலையில் எட்டாம் நாளான நேற்று (05) மாம்பழத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாம்பழத் திருவிழா நிறைவடைந்த பின்னர், முருகனின் மாம்பழம் ஆலய நிர்வாக சபையினரால் ஏலம் விடப்பட்டது.

இதன் போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்தும் ஆலயத்துக்கு வந்திருந்த அடியவர்கள் மாம்பழத்தை வாங்கும் நோக்கில் ஏலத்தில் ஈடுபட்டனர். இதனால் மாம்பழத்தின் கேள்வியும் உயர்ந்து கொண்டு சென்றது. இவ்வாறு பல லட்சங்களையும் தாண்டி மாம்பழம் ஏலம் எடுக்கப்பட்டது.

இதன்போது பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்திருந்த அ.அகிலன் எனும் அடியவர் நான்கு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கு இந்த மாம்பழத்தை ஏலத்தில் எடுத்திருந்தார்.

இதன் போது ஆலய நிர்வாக சபையினரால் ஏனைய சில பொருள்களும் ஏலத்தில் விடப்பட்டிருந்த நிலையில் அவற்றையும் அடியவர்கள் ஏலத்தில் வாங்கினர்.

ஆலயத்தின் 15 நாள் திருவிழாவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை பூங்காவனத் திருவிழாவும் புதன்கிழமை வைரவர் உற்சவமும் இடம்பெற்று திருவிழா நிறைவடையவுள்ளது.







# தமிழர்களது பூர்வீகக் காணிகளை விடுவிக்க மறுக்கிறது வனஇலாகா!

## சிங்களக்குடியேற்றதுக்கும் படைத்தளங்கள் அமைக்கவும் விடுவிக்கப்படுவதாக ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

**(விஜயரத்தினம் சரவணன்)**

வனவளத் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்வீக குடியிருப்பு மற்றும், விவசாயக் காணிகளை அடாவடித்தனமாக அபகரித்துவிட்டு, அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு மறுக்கிறது. அதேவேளை சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் படைத்தளங்களை அமைப்பதற்காகவும் விடுவிக்கிறது என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறிப்பாக முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தமிழர்களின் பூர்வீக ஏ.சி.பாம் கிராமத்தை வனவளத்திணைக்களம் அபகரித்துவிட்டு விடுக்க மறுப்பதையும் சுட்டிக்காட்டினார்.

வவுனியா வடக்கில் போகஸ்வெவ எனும் சிங்களக்குடியேற்றத்தை ஏற்படுத்த 2000 ஏக்கர் ஒதுக்கக்காடு வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதையும், ஒட்டுசுட்டான், அம்பகாமம் பகுதியில் விமானப் படைத்தளம் அமைப்பதற்கு சட்டவிரோதமாக ஒதுக்கக்காடுகள் அழிக்கப்பட்டுள்ள விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஊழலை ஒழிப்போமெனும் கோசத்துடன் ஆட்சிபீடமேறிய இந்த அரசு, கடந்த காலத்தில் சட்டவிரோதமாக இடம்பெற்ற ஒதுக்கக்காடு அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும், கடந்த காலத்தில் முறையற்ற தீர்மானங்களை எடுப்பதற்கு வற்புறுத்திய அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று (03) இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்தசில நாள்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நான் மேற்கொண்ட களவிஜயத்தின் போது, அரசின் சில திணைக்களங்கள் நூதனமானமுறையில் தமிழ் மக்களின் காணிகளைத் திருடி வருவதை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரணாக பொது மக்களின் காணிகளைத் திருடி வருகின்றன.

பொது மக்களின் குடியிருப்புக் காணிகளையும், அவர்களின் வயல் நிலங்



களையும், வர்த்தமானி அறிவித்தல் மூலம் சட்டத்துக்கு முரணான வகையில் வன ஒதுக்குப் பிரதேசங்களாக, தொல்லியல் ஒதுக்குப் பிரதேசங்களாக ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளன.

இதனால் இங்குள்ள மக்கள் தமது பூர்வீக குடியிருப்புக்களில் குடியிருக்க முடியாமல், வயல் நிலங்களில் பயிரிட முடியாமல் இத்திணைக்களங்களால் துரத்தியடிக்கப்படுகின்றார்கள். இதனால் அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய அன்றாட உணவுத் தேவை, அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி என்பன மறுக்கப்படுகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தண்டுவான் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஏ.சி.பாம் என்ற கிராமத்தில் 47 குடும்பங்கள் வசித்து வந்த நிலையில், 1997 இல் ஜெயசிக்குறு இராணுவ நடடிக்கையின் மூலம் இவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு நவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டன என்று கூறப்படுகின்று நிலையில், இந்த மக்கள் இன்னும் தங்கள் சொந்தக் கிராமத்தில் மீள்குடியேற்றப்படவில்லை. காரணம் கடந்த 2012 ஆம் ஆண்டு இந்தக் கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காடு என வன வளத் திணைக்களத்தால் சட்டத்துக்கு முரணாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றமையாகும்.

ஒரு பிரதேசத்தை வன ஒதுக்காக வர்த்தமானிமூலம் அறிவித்தல் செய்யும்முன், அதுபற்றி அப்பிரதேச மக்களுக்கு பிரதேச செயலாளர் ஊடாக அறிவிக்கவேண்டும். இது தொடர்பான கருத்துக்கள் மக்களிடம் பெறப்பட வேண்டும். இவற்றுக்கெல்லாம் முரணாக, இவ்வாறெல்லாம் செய்யாமல் இப்பிரதேசம் தண்டுவான் வன ஒதுக்குப் பிரதேசமாக நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளுக்கு புறம்பாக வர்த்தமானப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் திணைக்களம் இப்பிரதேசத்தை தண்டுவான் வனஒதுக்குப் பிரதேசமாக 2012 இல் வர்த்தமானி அறிவித்தல் நிவித்தல் செய்யும் முன்பு, 1979 ஆம் ஆண்டில் இந்தப் பிரதேசம் இலங்கை நில அளவைத் திணைக்களத்தால் அளவீடுசெய்யப்பட்டு, எல்லைக் கற்கள் நாட்டப்பட்டு, நில அளவை வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ரொப் ஒவ் பிபி 66 என்ற வரைபடத் தொகுதியினுள் இவ்வரைபடம் உள்ளது.

இந்தக்கிராமத்தைத் திட்டமிட்டு திருடும்போது வனவளத் திணைக்களத்துக்கு இது தெரிந்திருக்கவில்லை. இதேபோலத்தான் சட்டத்துக்கு முரணாக வனவளத்திணைக்களம் தமிழ் மக்களின் காணிளை வன ஒதுக்குப் பகுதியாக வர்த்தமானி மூலம் அறிவித்து வருகின்றது.

ஒதுக்காட்டில் அமைந்துள்ள அமைந் னுதுள்ள சித்தாத்தன் குளம் எனப்படும் தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்களை விடுவிக்க வனவளத் திணைக்களம் இதுவரை இணங்கவில்லை.

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில், வனஒதுக்கு பிரதேசங்களை சிங்கள மக்களைமட்டுமே கொண்ட குடியேற்றத் திட்டமான போகஸ்வெவ உருவாக்குவதற்காக 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனவளத் திணைக்களம் விடுவித்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரவின் அம்பகாமம் பகுதியில் இலங்கை விமானப்படையின் விமானப்படைத்தளம் அமைப்பதற்கு, ஒதுக்கப்பட்ட வனப் பகுதியிலிருந்து 8000 ஏக்கர் வனப் பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. வனவளத் திணைக்களத்தின் அனுமதி இன்றி, குறித்த சட்ட ஏற்பாடுகள் எவற்றையும் பின்பற்றாது, இந்த அடர்வனப் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பெறுமதியான மரங்கள் இரகசியமான விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஊழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள அரசு இது தொடர்பில் வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

சமகாலத்தில் நாம் மிகவும் வேதனைப்பட வேண்டிய விடயம் என்னவெனில் வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் போன்ற திருட்டுத் திணைக்களங்களில் உயர்அதிகாரிகள் நீதிபதிகளாக மாறிவிட்டனர். வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டச் செயலகங்கள் தோறும் வன ஒதுக்குப் பிரதேசங்களை விடுவிப்பதாகக்கூறி விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

விசாரணை மேற்கொள்ளவரும் அதிகாரிகள் கடந்தகால அரசுகளின் காலத்தில் ஊழலில் மூழ்கித் திளைத்தவர்களாவர். இவர்கள் இங்குள்ள ஒதுக்கு வனப் பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் பொய்யான தகவல்களை அரசுக்கு வழங்கிவருவதுடன், மாவட்டச் செயலாளர் உட்பட, தமிழ் அதிகாரி

தொடர்ச்சி▼

# தமிழர்களது பூர்வீகக் காணிகளை விடுவிக்க மறுக்கிறது வனஇலாகா!

**தொடர்ச்சி▲**

களையும் இப்பொய்த் தகவல்களை ஏற்றுக் கொள்ளும்படி அதிகாரத் தோரணையில் மிரட்டியும் வருகின்றனர்.

கடந்த 2023.06.01 இல் முல்லைத் தீவு மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோருடன் வனவளப்பகுதிகளை விடுவிப்பதாகக்கூறி கூட்டமொன்றை ஏற்படுத்திய வனவள மற்றும், வனஜீவராசிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சமந்தி, வனவள மற்றும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் முறையற்ற தீர்மானங்கள் சிலவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியதுடன், அத்தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஒருஅங்குலம் நிலத்தைக்கூட விடுவிக்கமுடியாதென அச்சுறுத்தியுள்ளார். கடந்த அரசாங்கங்களின் காலத்தில் கடமையாற்றிய இவர்களைப்போன்ற அதிகாரிகளை இந்தஅரசாங்கம் எச்சரிக்கையுடன் கையாளவேண்டும். நாங்கள் வனப்பகுதிகளை விடுவித்துத் தாருங்கள் எனக் கேட்டு, காடழிப்புக்கு வழி கோரவில்லை.

எங்கள் வீடுகளையும், வயல்களையும், தெருக்களையும் விடுவியுங்கள் என்றே கேட்கின்றோம். எமது மக்களின் நிலங்களை விடுவியுங்கள். எமது மக்கள் உழைப்புக்குப் பழக்கப்பட்டவர்கள். உழைத்து வாழ்வார்கள். நிலங்களை விடுவிக்காதவரை அம்மக்களின் அன்றாட வாழ்வுக்கான நிவாரணங்களை வழங்குங்கள். அவர்களின் குழந்தைகள் பசியுடன் இருக்கின்றனர். – என்றார்.




# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி உறுப்பினர் சத்தியப்பிரமாணம்

**தமிழ் தேசிய மக்கள் முன்னணி, நண்டு சின்னத்திலான சுயேச்சை குழு என்பனவும் ஆதரவு**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு மன்னாரில் நேற்று (3) இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் சுயேச்சைக்குழு சார்பாக போட்டியிட்ட ஜி.எம்.சீலன் தலைமையிலான குழுவினரும் ஆதரவு தெரிவித்து வருகை தந்ததோடு அவர்களது உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

சத்தியப்பிரமாண நிகழ்வில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ், புளொட் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஜேம்ஸ், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஜோன்சன், சுயேச்சை குழுவின் தலைவர் ஜி.எம்.சீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# குச்சவெளி மீனவர் மீதான துப்பாக்கிச் சூடு; உடனடி சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்!

### வண்மையாக கண்டிப்பதாகவும் முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு

(ஏ.எச். ஹஸ்பர்)

திருகோணமலை, குச்சவெளி பிரதேசத்தை சேர்ந்த மீனவர் இஜாஸ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தை கண்டிப்பதாகவும், துப்பாக்கிச்சூடு நடத்திய கடற்டையினர் மீது உடனடி சட்டநடவடிக்கை மேற்கொள் ளப்பட வேண்டும் என்றும் முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு இது குறித்து இன்று (04)வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேசத்தில் இருந்து திருகோணமலை கடலுக்குச் சென்ற இஜாஸ் என்ற மீனவர் மீது, கடற்படை யினரால் நேற்று (03) மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மிகுந்த கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத் தியுள்ளது.

மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படும்



மனிதாபற்ற தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மீனவர்கள் பாதுகாப்பாக, அச்சமின்றி தொழிலுக்கு சொல்லக்கூடிய சூழ்ந்நிலையை இந்த அரசு உருவாக்கப்பட வேண்டும்.– என்று அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குச்சவெளியில் மீனவர் மீது துப்பாக்கிச்சூடு; சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

### ரிஷாட் பதியுதீன் எம்.பி. பொலிஸ்மா அதிபரிடம் அவசர வேண்டுகோள்

(அபு அலா )

திருகோணமலை, குச்சவெளியில் இருந்து கடலுக்குச் சென்ற இஜாஸ் என்ற நபர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு சம்பவத்தைக் கண்டிக் கிறோம். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர்கள் மீது சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு பொலிஸ் மா அதிபரிடம் அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப் பினருமான ரிஷாத் பதியுதீன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

குச்சவெளி பிரதேசத்தில் இருந்து திருகோணமலைக் கடலுக்குச் சென்ற இஜாஸ் என்ற மீனவர் மீது, கடற்படை யினரால் நேற்று (03) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதற்கு இலக்காகி காயமடைந்தவர் அதி தீவிர சிகிச்சைப்



பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீனவத்தொழிலுக்காக கடலுக்குச் சென்ற அப்பாவி சமூகத்தினர் மீது, கடற்படை பாதுகாப்பு தரப்பினர் அத்து மீறு நடப்பதை நாம் வண்மையாக கண்டிக்கின்றோம்.

சந்தேக நபர்களாக, சந்தேகிக்கப் பட்டால் உரிய முறைப்படி விசாரித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இவ்வாறு தான்தோன்றித்தனமான முறையில் அப்பாவிகள் மீது துப்பாகிச் சூடு மேற்கொள்ளும் செயற்பாட்டை நிறுத்த வேண்டும்.

இவ்வாறான செயற்பாட்டால்தான் நாட்டின் பாதுகாப்புத் துறை மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். இது அதற்குப் பெரும் உதாரணமாகி அமைந்துவிடும்.

மீனவ சமூகத்துக்கு அச்சமூட்டும் இந்தச் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். குறித்த சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பு உடனடியாக விசார ணை மேற்கொள்ள வேண்டும். இந்தச் சம்பவத்தால் மீனவ சமூகத்துக்கு மட்டு மல்ல, நாட்டின் சட்ட ஒழுங்குக்கும் சவா லாக அமைந்துள்ளது என்று ரிஷாத் பதியுதீன் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அரைநாள் விடுமுறை வழங்குக!

### இம்ரான் எம்.பி. பிரதமரிடம் கோரிக்கை

(அபு அலா )

இலங்கை முஸ்லிம்கள் ஹஜ்ஜுப் பெருநாளை எதிர்வரும் சனிக்கிழமை கொண்டாடவுள்ளனர். இதற்காகக் கல்விக் கல்லூரிகளில் கல்வி பயிலும் முஸ்லிம் ஆசிரியர் பயிலுனர்களுக்கு முதல் நாளான வெள்ளிக்கிழமை அரை நாள் விடுமுறை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டப் நாடா ளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமரை நேற்று செவ்வாய்க்கிழமை (03) நேரில் சந்தித்த இம்ரான் எம்.பி.,



இது தொடர்பான மகஜர் ஒன்றையும் கையளித்து வைத்தார்.

எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை ஹஜ்ஜுப் பெருநாள் தினமாகும். வழமையாக வெள்ளிக்கிழமை மாலை வரை கல்விக் கல்லூரிகளில் செயற் பாடுகள் இடம்பெறுவது வழமை. இதன் பின்னர் தூர இடங்களுக்குச் செல்லும் ஆசிரியர் பயிலுனர்களால் அவர்களது இருப்பிடங்களுக்குச் செல்வதில் இடர் பாடுகள் உள்ளன.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு கல்விக் கல்லூரிகளின் முஸ்லிம் ஆசிரியர் பயிலுனர்களுக்கு வெள்ளிக்கிழமை அரைநாள் விடுமுறை வழங்க ஏற்பாடு செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை செவிமடுத்த பிரதமர் உரிய அதிகாரிகளோடு கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று அவர் உறுதி யளித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.





# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் வவுணதீவில்!

(பழுவூரான்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலர் பிரிவில் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று செவ்வாய்க்கிழமை (03) இடம் பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபவனி, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் திருமதி ந.சத்தியானந்தி, மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.கோபாலப்பிள்ளை ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றன.

வவுணதீவு இலங்கை வங்கிக் கிளையின் முன்றலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நடை பவனியானது, வவுணதீவு உழவர் சந்தியை அடைந்தது. அங்கு கொத்தியாபுலை கலைவாணி வித்தியாலய மாணவர்களால் 'பிளாத்திக்கு மாசுபாட்டை முறியடிப்போம்' எனும் தொனிப் பொருளில் வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டது.

அங்கிருந்து வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயத்தை அடைந்து அங்கு மர நடுகை நிகழ்வுகளுடன் தேசிய கீதம் மற்றும் சுற்றாடல் கீதம் இசைக் கப்பட்டு சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்ட மாணவர்களால் 'பூமியை பசுமையாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் நாடகமும், பல்வேறு கவிதைகளும் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச சபை செயலாளர் எஸ்.கோகுலன், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி தேவரஜனி உதயாகரன், சா.சஜீவன், கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஷாஹீட், மண்முனை மேற்கு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி காயத்திரி சிறிவித்தியன், வவுணதீவு பொலிஸ் நிலையத்தின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி கே.பி. விஜயந்த, வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி.ரமேஷ் குமார் உள்ளிட்ட உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உலக சுற்றாடல் தினம் நாளை 05 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு இந்த வாரம் முழுவதும் "சுற்றாடலை தூய்மையாக வைத்திருத்தல் மற்றும் பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல்" போன்ற விழிப்புணர்வு செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக இடம் பெற்று வருகின்றது.

# உணவு கையாளும் நிலையங்களை தரநிலைப்படுத்தும் பரிசோதனை!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், எச் - 800 இற்கு அமைய உணவு கையாளும் நிறுவனங்களை தரநிலைப் படுத்துவதற்கான பரிசோதனை, இன்று (03) சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கு அமையவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதனின் தலைமையிலும் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டன.



இந்தச் செயற்பாடுகளில் போது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கடைகள் பார்வையிடப்பட்டன.

கடைகளில் சுகாதார நிலைமைகள், உணவுப் பொருள்களின் பாதுகாப்பு பரிசீலனை செய்யப்பட்டது. கடை உரிமையாளர்களுக்குச் சுகாதார வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. தேவையான இடங்களில் எதிர்வரும் நாள்களில் மீள்பார்வை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் மக்கள் நலனை நோக்கி முன்னெடுக்கப்பட்டன. கடைகளில் சுகாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



# நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை கூட்டுமாறு பிரதமர் மோடியிடம் 16 எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரை கூட்டுமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் 16 எதிர்க்கட்சிகளும் இணைந்து வலியுறுத்தியுள்ளன.

பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து இந்திய இராணுவம் ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டது. இதில், ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்த தீவிரவாத முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இந்த நிலையில், தேசிய பாதுகாப்பு பிரச்சினைகள் மற்றும் ஒபரேஷன் சிந்தூருக்கு பிறகு இந்திய வெளியுறவு கொள்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து சுதந்திரமான மற்றும் நியாயமான விவாதம் தேவை என்பதை எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன. இதையடுத்து, 16 எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட பிரதமர் மோடியிடம் வலியுறுத்தி உள்ளன.

இதுகுறித்து திரிணமூல் காங்கிரஸ் மாநிலங்களவை எம்.பி. டெரிக் ஓ பிரையன் கூறுகையில்,

"இந்த முயற்சி நாடாளுமன்றக் கட்சி மட்டத்தில் மட்டும் எடுக்கப்படவில்லை, மாறாக 16 அரசியல் கட்சிகளின் தலைவர்களிடையே ஒருமித்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சுதந்திரமான மற்றும் நியாயமான விவாதம் என்பது துடிப்பான ஜனநாயகத்தின் அடித்தளம் ஆகும். அரசு நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு. நாடாளுமன்றம் மக்களுக்குப் பொறுப்பு." - என்றார்.



# மழை, நிலச்சரிவால் 36 பேர் உயிரிழப்பு; முதல்வர்களுடன் மோடி ஆலோசனை

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பெய்து வரும் கனமழை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் வெள்ள நிலவரம் குறித்து, மாநில முதல்வர்களிடம் பிரதமர் மோடி கேட்டறிந்துள்ளார். நிவாரணப் பணிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என அவர் உறுதியளித்தார்.

அசாம், மணிப்பூர், சிக்கிம் உள்ளிட்ட வட மாநிலங்களில் கடந்த சில நாள்களாக கனமழை தொடர்ந்து பெய்து வருகிறது. அசாம் மாநிலத்தில் வெள்ள பாதிப்பு மிகவும் மோசமடைந்துள்ளது. அங்கு 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளனர். சிக்கிம் மாநிலத்தில் சாட்டன் எனும் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

அசாம், மிசோரம், அருணாச்சலப் பிரதேசம், மேகாலயா, மணிப்பூர் மற்றும் திரிபுராவில் அதிக கனமழை பெய்வதற்கான வாய்ப்புள்ளதாக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங் மற்றும் மணிப்பூர் ஆளுநர் அஜய் பல்லா ஆகியோரிடம் பிரதமர் மோடி பேசி வெள்ள நிலவரம் குறித்து கேட்டறிந்துள்ளார். நிவாரண பணிகளுக்கான அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு தயாராக இருப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.



# டொனால்ட் ட்ரம்பிடம் மோடி சரணடைந்தார்

## ராகுல் காந்தி விமர்சனம்



இந்தியா – பாகிஸ்தான் இடையே நடந்த மோதலின்போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் அழைத்துப் பேசியதும் பிரதமர் நரேந்திர மோடி சரணடைந்துவிட்டார் என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

மத்தியப் பிரதேச தலைநகர் போபாலில் நடந்த காங்கிரஸ் தொண்டர்கள் மாநாட்டில் உரையாற்றிய ராகுல் காந்தி,

“நாட்டில் தற்போது சித்தாந்தப் போர் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் காங்கிரஸ்“ம் அரசமைப்பும் இணைந்து நிற்கின்றன. மறுபுறம் அரசியலமைப்பை முடிவுக்குக் கொண்டுவர விரும்பும் பா.ஜ.கவும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் உள்ளன. படிப்படியாக இந்தியாவின் அனைத்து நிறுவனங்களையும் அவர்கள் கைப்பற்றி, நாட்டுக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்துகிறார்கள்.

இரண்டாவது போர் சமூக நீதிக்கானது. மக்களவையிலும், மாநிலங்களவையிலும் சாதிவாரி கணக்கெடுப்பை நிறைவேற்ற நான் பாடுபடுவேன் என்று மக்களவையில் தேசத்திற்கு உறுதியளித்தேன். பா.ஜ.க. மற்றும் ஆர்எஸ்எஸ் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் அவர்கள் மீது கொஞ்சம் அழுத்தம் கொடுத்தால் போதும், அவர்கள் பயப்படுவார்கள். ட்ரம்ப் போன் செய்து, “நரேந்திரா, சரணடை“ என்று சொன்னபோது அப்படியே செய்ததைப் போல. இது பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ்ஸின் குணம், அவர்கள் எப்போதும் தலைவணங்குகிறார்கள்.

ஆனால், காங்கிரசின் வரலாறு அப்படி அல்ல. அமெரிக்காவின் அச்சுறுத்தலையும் மீறி 1971-இல் இந்தியா பாகிஸ்தானை உடைத்தது. காங்கிரஸின் சிங்கங்கள், வல்லரசுகளுக்கு எதிராகப் போராடுகின்றன. அவர்கள் ஒருபோதும் தலைவணங்குவதில்லை.” என்றார்.



# தென் கொரிய ஜனாதிபதி தேர்தலில் லீ ஜே-மியுங் வெற்றி பெற்றார்

தென் கொரியாவின் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் லீ ஜே-மியுங் வெற்றி பெற்றுள்ளார்.

61 வயதான அவர், நடந்து முடிந்த தேர்தலில் 49.3 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பழமைவாத மக்கள் சக்தி கட்சியின் தலைவர் கிம் மூன்-சூ 41.3 சதவீத வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதியின் இராணுவச் சட்ட அமுலாக்க முயற்சி தோல்வியடைந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு, இந்த தேர்தல் நடைபெற்றுள்ளது.

இந்த சட்ட அமுலாக்க முயற்சி பெரும் போராட்டங்களைத் தூண்டியதுடன், அது முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலை பதவி நீக்கவும் வழி வகுத்தது.

எனினும் அவர், தற்போது தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தமைக்காக குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் துப்பாக்கி பிரயோகம்

## 27 பேர் உயிரிழப்பு

தெற்கு காசாவின், ரஃபா நகரில் உதவிகளுக்காகக் காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில், 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், 90 பேர் காயமடைந்துள்ளனர் என காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பல சந்தேகநபர்களை அடையாளம் கண்டதன் பின்னர் உதவி வழங்கப்படும் வளாகத்துக்கு அருகே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன், உயிரிழப்புகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், அங்கு உயிரிழப்புகள் அதிகரித்து வருவதாகக் காசா சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

மூன்றாவது நாளாகவும் உதவிக்காகக் காத்திருந்த பாலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட இவ்வாறான தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டனர் என காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இந்த தாக்குதல் குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் - 3

புதன்கிழமை 04/06/2025

## எல்லைப் பாதுகாப்பு சட்ட மூலத்தை சமர்ப்பிக்கின்றார் கரி ஆனந்தசங்கரி



C2 ▶



# கனடாவில் தொடர்ந்து பரவும் காட்டுத்தீ 1.4 மில்லியன் ஏக்கர் பிரதேசம் பாதிப்பு

கனடாவின், மானிடோபா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீப்பரவலினால் 1.4 மில்லியன் ஏக்கர் பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கனடாவின் மானிடோபாவைச் சேர்ந்த சுமார் 17,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

காட்டுத்தீயிலிருந்து பரவும் புகை காரணமாக, மினசோட்டா மற்றும் வடக்கு டகோட்டா மாநிலங்களிலும் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளில் நேற்றைய தினம் ஏற்பட்ட காட்டுத்தீப் பரவல் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால், மூன்று மாகாணங்களில் உள்ள 25,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.





# கனடா நடத்தும் ஜி-7 உச்சி மாநாட்டை புறக்கணிக்கிறார் இந்தியப் பிரதமர் மோடி





ஜி - 7 நாடுகளின் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டை இந்த முறை கனடா தலைமையேற்று நடத்துகிறது. ஜூன் 15 முதல் 17 வரை நடைபெற உள்ள மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க மாட்டார் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

உலக நாடுகள் இடையே பல கூட்டமைப்புகள் உள்ளன. வர்த்தகம், பாதுகாப்பு சார்ந்து ஒவ்வொரு நாடுகளும் பிற நாடுகளுடன் சேர்ந்து செயல்பட்டு வருகின்றன. இதனை இன்னும் பலப்படுத்தும் வகையில் பல நாடுகள் இணைந்து கூட்டமைப்புகளை உருவாக்கி உள்ளன.




# எல்லைப் பாதுகாப்பு சட்ட மூலத்தை சமர்ப்பிக்கின்றார் கரி ஆனந்தசங்கரி

கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி புதிய சட்ட மூலத்தை தாக்கல் செய்கின்றார்.

இது, எல்லைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கனடா மத்திய அரசின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை விளக்கும் முக்கியமான சட்ட முன்மொழிவாகும். அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றிய போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எல்லைகளில் பாதுகாப்பை வலுப்படுத்தும் சட்டங்களை கொண்டு வருவதாகவும், உயிருக்கு ஆபத்தான பெண்டனில் மற்றும் அதனுடைய மூலப்பொருள்களின் கடத்தலைத் தடுக்க பொலிஸ் மற்றும் புலனாய்வு அமைப்புகளுக்கு புதிய கருவிகளை வழங்குவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

இந்த புதிய சட்ட மூலம், கனடா எல்லை சேவைகளுக்கான நிறுவனத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது.

இது, சட்டவிரோத பொருள்கள் மற்றும் திருடப்பட்ட கார்கள் கொள்கலன் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றதா என்பது குறித்து ஆய்வு செய்ய புதிய சட்ட மூலத்தில் அதிகாரம் வழங்கப்பட உள்ளது.

பெண்டனில் மற்றும் சட்டவிரோத குடிபெயர்வுகளை சமாளிக்க கனடா போதுமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பைப் புரிந்து கொள்ளச் செய்ய லிபரல் கட்சியினர் முயற்சி செய்து வருகின்றனர்.

அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்படும் போதை மருந்துகள் மற்றும் குடிபெயர்வாளர்களை காரணமாக்கி, ட்ரம்ப் கனடிய இறக்குமதிகளுக்கு மேலதிக வரிகள் விதித்திருந்தார்.

இப்போது தாக்கல் செய்யப்படும் சட்டமூலம், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகும்.

அதில், ஹெலிக்கொப்டர்கள், ட்ரோன்கள் மற்றும் கண்காணிப்பு கோபுரங்களைப் பயன்படுத்தி எல்லைப் பகுதியில் முழுநேர கண்காணிப்பு உள்ளிட்ட அம்சங்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

**கனடா நடத்தும்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அதில் ஒரு முக்கியமான கூட்டமைப்பு தான் ஜி 7. இந்த ஜி 7 கூட்டமைப்பில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், கனடா ஆகிய ஏழு நாடுகள் இடம்பெற்றுள்ளன. இதில் நம் நாடு இடம்பெறவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் ஜி 7 மாநாட்டை கூட்டமைப்பில் உள்ள நாடு தலைமையேற்று நடத்தி வருகிறது. இந்த சமயத்தில் கூட்டமைப்பில் இல்லாத நாடுகளின் தலைவர்களுக்கு மாநாட்டை ஏற்று நடத்தும் நாடுகள் அழைப்பு விடுக்கும். அந்த வகையில் கடந்த 6 ஆண்டுகளாக பிரதமர் மோடி ஜி 7 மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று வந்தார்.


இந்த முறை ஜி 7 மாநாட்டை கனடா தலைமையேற்று நடத்துகிறது. கனடாவில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை 3 நாள் ஜி 7 உச்சி மாநாடு நடைபெற உள்ளது. இதில் ஜி 7 நாடுகளை தவிர அவுஸ்திரேலியா, உக்ரைன், தென்ஆப்பிரிக்கா, பிரேஸில் உள்ளிட்ட நாடுகளுக்கு கனடா அழைப்பு விடுத்துள்ளது. மாநாட்டில் பங்கேற்கும்படி, பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அழைப்பு வந்தாலும் கனடாவுக்கு பயணம் செய்வதற்கு மோடி தயாராக இல்லை என்று சொல்லப்படுகிறது.

அதன்படி 6 ஆண்டுகளுக்குப் பின், முதல் முறையாக ஜி – 7 மாநாட்டில் மோடி பங்கேற்கமாட்டார் என்று சொல்லப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் காலிஸ்தான் பயங்கரவாத அமைப்பாகும். கனடா காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு மோசமடைந்தது.

இதற்கு கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியா மீது முன்வைத்த குற்றச்சாட்டுகள் தான் காரணமாகும். அதாவது கனடாவின் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டார்.

இதன் பின்னணியில் இந்தியா உள்ளதாக ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டினார். இதனை நம் நாடு முற்றிலுமாக மறுத்தது. ஆனாலும் ஜஸ்டின் ட்ரூடோ தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தார்.

இதனால் இருநாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்த விரிசல் தற்போது வரை சரியாகவில்லை. கனடாவில் ஏராளமான சீக்கியர்கள் உள்ளனர். இதில் ஒருதரப்பினர் காலிஸ்தான் ஆதரவாளர்களாக உள்ளனர். இதனால் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவும் கனடா செல்ல மோடி தயாராக இல்லை என கூறப்படுகிறது.



# கனடாவில் துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி; 5 பேர் காயம்

கனடாவில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 5 பேர் காயம் அடைந்துள்ளனர்.

கனடாவின் டொராண்டோவில் மர்மநபர்கள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 5 பேர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

யார்க்டேல் அங்காடிக்கு தெற்கே உள்ள ப்ளெமிங்டன் வீதி அருகில் இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வன்முறை எதனால் ஏற்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் யார்? என்ற விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.

இது குறித்து டொராண்டோ மேயர் ஒலிவியா சோவ் குறிப்பிடுகையில், "மிக பரபரப்பான இடத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து தகவல் அறிந்து மிகவும் கவலை அடைந்தேன். சம்பவ இடத்தில் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்ட மீட்பு படையினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்." என்றார்.




# பெண்கள் உடை மாற்றும் அறையில் படம் எடுத்த தமிழ் இளைஞர் கைது

கனடாவில் வணிக வளாகத்தில் பெண்கள் உடை மாற்றும் அறையின் சுவருக்கு அடியில் கையடக்க தொலைபேசி வைத்த குற்றச்சாட்டில் தமிழ் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரொரன்ரோவில் உள்ள வணிக வளாகத்தில் கடந்த 23 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடை மாற்றும் அறையில் இருந்தவரை நோக்கி அந்த கையடக்க தொலைபேசி காணப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் யோர்க் பிராந்திய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பின்னர் பொலிஸார் கடைக்கு வரவழைக்கப்பட்ட நிலையில், 30 வயதுடைய தமிழ் இளைஞர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.